**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.3411/ஆ5/2025, நாள்.16/07/2025**

.....

பொருள் பள்ளிக் கல்வி – அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள் – 8 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு மாவட்ட அளவிலான தமிழ் கலைச்சொல்லாக்கம் மற்றும ஓவியப் போட்டிகள் நடத்துதல் – மாணவர்கள் கலந்துக் கொள்ள தெரிவித்தல் – தொடர்பாக

பார்வை சென்னை – 6, பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.033257/எம்2/இ2/2025, நாள்.09.07.2025

.....

பார்வையில் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் கடிதத்தில், செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் மூலம் ஆண்டுதோறும் நவம்பர் 8 ஆம் நாள் 'தமிழ் அகராதி இயல் நாள் விழா கொண்டாடப்பட்டு வருகிறது. இது தொடர்பாக 2025ஆம் ஆண்டில் மாவட்ட அளவில் போட்டிகளை நடத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட அளவிலான கலைச்சொல்லாக்கப் போட்டி மற்றும் ஓவியப் போட்டி கீழ்காணும் படி நடைபெறவுள்ளது. இப்போட்டியில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 8 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் பங்கு பெறலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மாவட்ட அளவிலான கலைச்சொல்லாக்கப் போட்டி மற்றும் ஓவியப் போட்டி**
**நாள் – 29.07.2025 (செவ்வாய் கிழமை)**
**இடம் – ஸ்ரீ வெங்டேஸ்வரா மேல்நிலைப் பள்ளி, வேலூர்**
**நேரம் – காலை 9.30 மணி**

மேற்காணும் படி நடைபெறும் மாவட்ட அளவிலான போட்டியில் பங்கு பெறும் மாணவர்களில் ஒரு போட்டிக்கு ஒருவர் வீதம் மாவட்டத்திற்கு இரண்டு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். வெற்றி பெற்ற மாணவர்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்ப படிவத்தில் அவர்களின் விவரங்களை பூர்த்தி செய்து தலைமையாசிரியரின் பரிந்துரையுடன் 19.08.2025 அன்று சென்னையில் நடைபெறும் மாநில அளவிலான போட்டியில் பங்கு பெறுவர்.

மாநில அளவில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு ஒவ்வொரு போட்டியிலும் முதல் மற்றும் இரண்டாம் இடங்களுக்கு பரிசுகள் வழங்கப்படும். முதல் பரிசு – ரூ. 10,000/– இரண்டாம் பரிசு – ரூ. 5,000/– என இரு போட்டிகளுக்கும் ஆக மொத்தம் ரூ.30,000/– வழங்கப்படும். இப்போட்டிகளில் பங்கேற்கும் மாணவர்கள் அனைவருக்கும் அரசின் பங்கேற்புச் சான்றிதழ் வழங்கப்பெறும்.

**கலைச்சொல்லாக்கப் போட்டி –**

கலைச்சொல்லாக்கப் போட்டி என்பது, மாணவர்களிடையே ஆங்கிலச் சொற்களுக்கு இணையான புதிய தமிழ்ச் சொற்களை வடிவமைக்கும் ஆற்றலை வளர்த்தெடுப்பதாய் அமையும்

(எ–டு)

Gulab Jamun – தேங்கோளி

Cyber Crime – இணையதளக் குற்றம்

சொல்லாக்கப் போட்டியில், மக்களின் பேச்சுவழக்கு (ம) ஊடகங்களில் பயன்படுத்தப்படும் ஆங்கிலம் / பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச்சொற்களை வடிவமைக்கும் வகையில் வினாக்கள் அமையும்.

ஓவியப் போட்டி –

ஓவியப் போட்டி என்பது மாணவர்களிடையே தமிழ்ச் சொற்கள் அறிதலையும் அவற்றிற்கான பொருள் புரிதலையும் ஏற்படுத்தி கொடுக்கப்படும் சொற்களின் பொருளறிந்து அதற்கேற்ற படம் வரைவதன் மூலம் அவர்களின் ஓவியத்திறனையும் ஊக்குவிப்பதாக அமையும்.

(எ–டு) வளருங்காவில் முகில்தொகை ஏறும் பொன்
மாடம் எங்கும் அகிற்புகை நாறும்
குளிரும் மஞ்சையும் கொண்டலும் காக்கும் – என்ற பாடலில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் எழுதி வரைய வேண்டும்.

சான்று – மஞ்சை – மயில்

(ஓவியப் போட்டிகளுக்கான வினாக்கள் ஆறு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரையிலான தமிழ்ப் பாடங்களிலிருந்து இடம்பெறும்.)

படங்கள் வரைவதற்கான வண்ணக்கோல், வண்ணப்பூச்சு, கரிக்கோல், வரைபடத்தாள் உள்ளிட்ட பொருள்களுடன் வரவேண்டும்.

மேற்காணும்படி நடைபெறும் மாவட்ட அளவிலான கலைச்சொல்லாக்கப் போட்டி மற்றும் ஓவியப் போட்டியில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 8ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் கலந்துக் கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இப்போட்டிகள் தொடர்பாக சம்மந்தப்பட்ட ஆசிரியர்கள் மூலமாக மாணவர்களுக்கு பயிற்சி அளித்து மாவட்ட அளவில் சிறப்பாக செயல்பட்டு மாநில அளவில் நடைபெறும் போட்டியில் பங்கு பெற்று பரிசுகள் பெறுவதற்கு ஊக்குவிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு– படிவம்

16-07-25

முதன்மைக் கல்வி அலுவலர்(பொ),
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசிரியர்கள்,
அரசு / அரசு நிதியுதவி பெறும் நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.
(இவ்வலுவலக இணையதளம் மூலமாக)

நகல்.

1. சென்னை –6, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு
   தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்ட கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலை / தொடக்கக் கல்வி)
   வேலூர் மாவட்டம்.
   (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு
   இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
3. பள்ளித் துணை ஆய்வாளர்,
   (முதன்மைக் கல்வி அலுவலகம், வேலூர்)
4. தலைமையாசிரியர்,
   ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல்நிலைப் பள்ளி, வேலூர்.
   (போட்டி நடைபெறுவதற்கு போதிய வசதி செய்து தர தெரிவிக்கப்படுகிறது)